1982 பிப்ரவரி 16]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மாநகராட்சியே எடுத்துச் செய்ய வேண்டுமென்று தற்போது ஆணையிடப்பட்டிருக்கிறது.

திரு. கு. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே, சங்கனூர் பள்ளத்திலே பயங்கரமான அளவுக்குத் தண்ணீர் வந்து பெரிய நாசக்கேடு உருவாகி, ஏற்கனவே ஒரு பாலம் கட்ட முயற்சித்த பொழுது, அந்தப் பாலத்துக்குக் கூட ஆபத்து ஏற்பட்டது. ஆகவே, பாலங்கள் கட்டப்படுவதற்காகப் பாதுகாப்பு வேண்டுமென்ற அடிப்படையில், அந்தப் பள்ளத்தினுடைய கரைகளைப் பலமான அளவுக்குக் கட்டுவதற்கு ஏற்பாடும் அதோடு சேர்த்து செய்யப்படுமா? அதற்கு ஏதாவது திட்டங்கள் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கரைகளைப் பலப்படுத்துகிற திட்டமும் உள்ளது. அதையும் நிறைவேற்றுவோம்.

1-4-1974-க்கு முன் ஓய்வு பெற்ற ஊராட்சி ஒன்றிய பணியாளர்களுக்கான ஓய்வூதியம்.

*வினா எண் 193—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிந்து 1-4-1974-க்கு முன். ஓய்வு பெற்ற பணியாளர்கள் சங்கத்திடமிருந்து ஓய்வு ஊதியம் அளிக்கக்கோரி, கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம் தற்போது உள்ள விதிகளின்படி அவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்க இயலாது. எனினும் ஒரு குறிப்பிட்ட ஓய்வூதியம் Adhoc Pension அளிப்பது பற்றி பரிசீலிக்கப்படுகிறது.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கிற நிலையிலே ஓய்வூதியம் அளிக்கப்படாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த விகிதாச்சார அடிப்படையில் வருகின்றவர்கள், தற்போது குறைந்த எண்ணிக்கை உடையவர்களாக இருப்பதால், அவர்களின் வயது வரம்பைக் கருத்தில் கொண்டும், அவர்களின் முதுமை நிலைமையைக் கருத்தில் கொண்டும், தற்கால நிலைமையை அனுசரித்தும் அவர்களுக்கு தற்காலப் பென்ஷன் அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, 1-4-1974-க்கு முன் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு குறிப்பிட்ட ஓய்வூதியமாக ரூ. 100 வழங்கும் செயற்குறிப்பு இப்பொழுது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

(முற்பகல் 9—50)

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பென்சன்கள் அந்தந்த நகராட்சிகளில் ஏற்படுத்துவதைப் போல, ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இதுபோன்ற பரிசீலனை தற்போது இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் ஸ்கேல் ஆப் பே-வில் வித்தியாசம் இருக்கிறது. அதை மாற்றி அவர்களுக்கும் அரசு ஊழியர்களைப் போல சம்பளம் தருவதற்கு அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பென்ஷன் பற்றிய கேள்வி. மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, 1-4-1974-க்கு முன்பு, 1-4-1974-க்குப் பின்பு என்று பிரித்துக் காட்டுவது நல்லதல்ல. அவர்களும் நம்முடைய ஊழியர்களாக இருந்து சேவை செய்து ரிட்டையரானவர்கள். அவர்களுக்குள் பாகுபாடு காட்டுவது சரியல்ல. அதை நீக்கி இருவருக்கும் ஒரே அளவு பென்சனை கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அதுபோன்ற பரிசீலனை இல்லை.

திரு. ஏ. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணியாளர்களில் கார்டனர், வாட்ச்மேன் ஆகிய பணியாளர்கள் அடங்குவார்களா? இல்லையெனில் அவர்களுக்கும் இந்த ஓய்வு ஊதியம் வழங்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நிரந்தரமாகப் பணியாற்றுகிறவர்கள், 10 ஆண்டுகளுக்கு மேல் பணி செய்கின்றவர்கள் என்கின்ற வகையில் 1974-க்கு முன், 1974-க்குப் பின் என்று பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது. அதன்படிதான் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1974-க்கு முன் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு முன் என்றால் எந்தத் தேதியில் இருந்து அந்த ஓய்வூதியம் 100 ரூபாய் அரசு கொடுக்க முன் வந்திருக்கிறது.

1982 பிப்ரவரி 16]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இந்த 1-4-1974-க்கு முன் என்றால் அதற்கு முன்னாலே பணியாற்றியவர்கள் அதற்குப் பின்னாலே 10 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் என்று பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது.

பெருந்துறை, கருமாண்டி செல்லிபாளையம் ஆகியவைகளை இணைத்து நகராட்சியாக்கும் திட்டம்.

*வினா எண். 194—திரு. டி. கே. நல்லப்பன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை வட்டம், பெருந்துறை, கருமாண்டி செல்லிப்பாளையம் ஆகிய இரு பேரூராட்சிகளை இணைத்து நகராட்சி ஆக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் செயல் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்

(ஆ) பெரியார் மாவட்ட ஆட்சியாளர் இதற்கான செயற்குறிப்பை அரசுக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளார். அவரது செயற்குறிப்பு கிடைத்தவுடன் இதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி ஆக்குவதற்கு 'ஆம்' என்று மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டார்கள். ஆனால் அந்த இரண்டு பேரூராட்சிகளையும் இணைத்து, எந்த தேதியில் இருந்து நகராட்சியாக செயல்படும் என்று அமைச்சர் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, பெருந்துறை, கருமாண்டிசெல்லிப்பாளையம் என்ற இரு பேரூராட்சிகளையும் இணைத்து நகராட்சியாக்கவேண்டும் என்ற செயற்குறிப்புதான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அவருடைய செயற்குறிப்பு அரசுக்குக் கிடைத்த உடன் பரிசீலிக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, இது நீண்ட நெடுங்காலமாக இருக்கின்ற பிரச்சினை. அதே சமயத்தில் மக்களுடைய தொகையும், 2 பேரூராட்சிகள் இணைக்கப்படுகின்ற போது நகராட்சிக்குத் தேவையான மக்கள் தொகை இருக்கின்றன போதிய வருவாயும் இருக்கின்றது. ஆகவே இது செயற்குறிப்பிலே இல்லாமல் நடைமுறைக்கு வருவதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.